# ஆய்வுச்சுடர்

(பன்னாட்டு பன்முகத்தமிழ் அரையாண்டு மின்-ஆய்விதழ்)

## அய்யநாடார் ஜானகிஅம்மாள் கல்லூரி

(தன்னாட்சி, மதுரை காமராசர் பல்கலைக்கழக இணைவு பெற்றது, தேசியத்தர
மூன்றாம் மறுமதிப்பீட்டில் 'A' தகுதி (4க்கு 3.67 தரப் புள்ளிகள்), திறன்மிகு கல்லூரி,
புதுதில்லி இந்திய அரசு உயிரித் தொழில்நுட்பத்துறையின் நட்சத்திரத் தகுதி
மற்றும் தேசியத்தர வரிசைப் பட்டியலில் (NIRF 2017)13ஆம் இடம் பெற்றது)

**சிவகாசி - 626124, தமிழ்நாடு, இந்தியா.**

===========================================================================

**புரவலர்**
திரு. **கி. அபிரூபன்,** M.B.A.,
தாளாளர்

**தலைவர்**
முனைவர் **வ. பாண்டியராஜன்,** M.Sc.,M.Phil.,B.Ed.,Ph.D.,
முதல்வர்

**துணைத்தலைவர்**
முனைவர் **க. சிவனேசன்**
தமிழ்த்துறைத்தலைவர்

**பதிப்பாசிரியர்**
முனைவர் **ந. அருள்மொழி**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை

===========================================================================

## சுடரின் முழக்கம்

தொழில் சார்ந்து இயங்கி உலகப்புகழ்பெற்ற கந்தகமண் சிவகாசி, அறிவுசார்ந்த இயக்கப்பணிகளிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டதைப் பறைசாற்றிட 1963 ஆம் ஆண்டு தோன்றிய கல்வி நிறுவனமே "அய்யநாடார் ஜானகிஅம்மாள் கல்லூரி". எட்டிப் பார்த்தாலும் எட்ட நின்று பார்த்தாலும் சுற்றிப் பார்த்தாலும் சுற்றிச்சுற்றிப் பார்த்தாலும் கிராமப்புறம் சார்ந்த சுவடன்றி வேறொரு பூச்சு அறியாத பின்புலத்தில் உதித்த 'அஞ்சாக் கல்லூரி' எனும் கல்விச்சூரியன் தனது ஐம்பத்தைந்தாவது அகவையிலும் தன்னேரில்லாத் தமிழ்போல புதுப்புதுச் சாதனைகளோடு பயணிக்கின்றது. இக்கல்லூரியினை நிறுவிப் பெருமை படைத்த அண்ணல் திரு. ப.அய்யநாடார், அன்னை திருமதி அ.ஜானகிஅம்மாள் இருவரும் என்றென்றும் நினைத்தற்குரியவர்கள்; வணங்குதற்குரியவர்கள்.

திரு. ப.அய்யநாடார் அவர்கள் நிறுவிய அறிவுக் கோயிலைத் தலைமுறை உறவுகளாய்த் தழைத்து நின்று காத்துவரும் திரு. அ.கிரகதுரை, அரிமா திரு. அ.வைரப்பிரகாசம், திரு. அ.சுபாஷ் சந்திரபோஸ் (உறுப்பினர், அஞ்சாக்கல்லூரி ஆட்சிக்குழு), திரு. அ.இராமமூர்த்தி, B.Com., (தலைவர், அஞ்சாக்கல்லூரி ஆட்சிக்குழு), ஆகிய மூத்தோர்களை நன்றியோடு நினைந்து நிற்கின்றோம். ஆக்கச்சிந்தனைகளுக்கு வழிகோலும் திரு வை.அய்யன் கோடீஸ்வரன், B.Tech., (செயலர், அஞ்சாக்கல்லூரி ஆட்சிக்குழு), திரு. கி.அதிபதி, M.B.A., (உறுப்பினர், அஞ்சாக்கல்லூரி ஆட்சிக்குழு), திரு. கி.அபிரூபன், M.B.A.,(தாளாளர், அஞ்சாக் கல்லூரி ஆட்சிக்குழு), ஆகிய ஆன்றோர் பெருந்தகைகளின் செம்மைச் செயல்களைப் போற்றி நிற்கின்றோம். வளம்நிறை தமிழாய்வுச் செய்திகளை வெளிக்கொணரத் துணைநிற்கும் கல்லூரி முதல்வர் முனைவர் வ.பாண்டியராஜன் அவர்களுக்கு மனம் நிறைந்த நன்றி! தமிழ்ப் பணிக்கு உயிரூட்டும் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் க.சிவனேசன் அவர்களுக்கு உவகையோடு நன்றி!

மின்-ஆய்விதழோடு கரம் கோர்த்துள்ள ஆய்வுநெறிக்குழு உறுப்பினர்களுக்கு அன்பு தோய்ந்த நன்றி!. ஆய்வுக்கட்டுரைகளுக்கு அணிந்துரை வாயிலாகப் புதியதொரு வெளிச்சத்தைப் பாய்ச்சி ஊக்க விதைகளை விதைத்துள்ள முனைவர் வாசு அரங்கநாதன் (பேராசிரியர், தெற்காசியத்துறை, பென்சில்வேனியா பல்கலைக்கழகம், பிலடல்பியா, அமெரிக்கா) அவர்களுக்குப் பெருமகிழ்வோடு நன்றி!. கன்னல்மொழித் தமிழால் களிப்பு நிறைந்த வாழ்த்துரையினை வழங்கியுள்ள பெருந்தகையார் முனைவர் கோ.விசயராகவன் (இயக்குநர், உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை) அவர்களுக்குக் கனிவு நிறை நன்றி!.

ஆங்கிலப் பகுதிகளைச் செம்மை செய்து உதவிய எம்கல்லூரி ஆங்கிலத்துறைப் பேராசிரியர்கள் திருமதி. பூ.ராதிகா, திருமதி இரா.சோபியாராணி ஆகியோரின் உதவி உள்ளுந்தோறும் உவப்பூட்டுகின்றது. காலமறிந்து அட்டைப்படத்தை வடிவமைத்துக் கொடுத்த காட்சித்தொடர்பியல்துறை

உதவிப்பேராசிரியர் பா.வெங்கடேஷ் அவர்களுக்கு நன்றி! உழைப்புத்துளிகளால் உவகை ஊட்டிய தொழில்நுட்பக்குழு மாணவர்களுக்கு உள்ளம் நிறை நன்றி! வெளித்தெரியாது இவ் இதழ் பணிக்கு பல்லாற்றானும் உழைத்திட்ட நல்உள்ளம் நிறைந்த வேர்களுக்கு என்றென்றும் நன்றி!

தமிழ் எனும் மொழிப் பேழைக்குள் பொதிந்து கிடக்கும் ஆய்வுமுத்துக்களை வெளிச்சமிட வேண்டுமென்ற பெருவிருப்போடு மலரும் தமிழ்த்துறையின் மின்-ஆய்விதழ் ஆய்வுச்சுடர், நவகண்டச்சிற்பம் புலப்படுத்தும் தொல்தமிழர் வீரம் - சங்கப்பாக்களின் ஒற்றை எழுத்துக்குள் ஒளிந்திருக்கும் பல்வேறு பொருண்மைகள் - சங்க கால ஔவை முதலாக இன்றைய ஔவை ஈறாக உள்ள பெண்மன ஓட்டத்தின் மீட்டெடுப்பு- தமிழ், மலையாள மொழி உறவு சுட்டும் அகராதி ஆக்கம் - இயல்பாக வாழத்தூண்டும் கருத்துக்களைப் போதிக்கும் ஜென்மதக் கருத்தாடல்கள் - நெசவாளர்களின் தொழில்சார்ந்த வாழ்வியலிலும் பரிணமித்து நின்று வாழும் கலைச்சொல் பயன்பாடு - தமிழ்க்குடிக்கு நூல் பல படைத்து ஈந்திட்ட தமிழறிஞரின் அறிவுப் படையல் - தமிழ், இந்தி மொழி இலக்கியங்களில் பதிவு பெற்றுள்ள பெண்ணியத்தளம் - கடவுளர்களின் உறுப்பு உருவ அமைப்புகள் மருத்துவத் துறைக்கு உயிரூட்டிய அறிவு மலர்ச்சி - எண்ணும் எண்ணத்தில் மட்டுமின்றி உண்ணும் உணவிலும் அறிவியல் கலந்து உண்ட சங்கத்தமிழரின் அறிவுப்புலப்பாடு - அக்காலம் இக்காலம் எனும் பேதமின்றி எக்காலமும் உலகுவாழ் உயிர்களுக்குத் தேவைப்படும் பாதுகாப்பு - உற்றுநோக்கோடும் அறிவியல் நோக்கோடும் பார்க்கத் தூண்டும் சங்கத்தமிழரின் விலங்கினப் பதிவுகள் - காலம் கடந்தும் வாழும் தி. ஜானகிராமனின் எழுத்துக்களுள் மறைந்து வாழும் உளவியல் - காலக்கணினியை மொழி சார்ந்தும் பயன்படுத்தத்தூண்டும் கணினியக்களம் - பேருருவப் படைப்பாம் யானையின் புரிதலுக்குப் பயன்படும் மொழிக்களம் - ஓலைச்சுவடிகளில் தவழும் சமூக வரலாற்றுச் சுவடுகள் எனப் பல்வேறு பொருண்மைகளைத் தாங்கி முதல் இதழாக உலா வருகின்றது.

சங்கின் முழக்கம் போல ஆய்வுச்சுடரின் அறிவு முழக்கம், ஆய்வுப்பாதையின் புதிய புதிய தடங்களைக் கண்டறிந்து பெருமுழக்கமாக ஒலி எழுப்பட்டும்.........

**ந. அருள்மொழி**
பதிப்பாசிரியர்